# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

**முறையீட்டு மனு எண்: 1217/2016/பே**

**ஆணை எண்: 231 /2017**

**நாள்: 14/09/2017**

திரு. உ. காஜாமைதீன்,
தலைவர்,
எட்டையாபுரம் நகர் நலச்சங்கம்,
25. நாவலக்கம்பட்டி ரோடு,
எட்டயபுரம் – 628 902
தூத்துக்குடி மாவட்டம். — முறையீட்டு மனுதாரர்

திரு. க. சுப்பிரமணியம்,
முன்னாள் செயல் அலுவலர்,
எட்டயபுரம் பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம். — எதிர் மனுதாரர்

**ஆணை**

தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் பேரூராட்சியை சேர்ந்த திரு. உ. காஜாமைதீன் என்பவரின் 29.11.2016–ம் நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 21.12.2016 அன்று பெறப்பட்டு முறையீட்டு மனு எண்.1217/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் திரு. உ. காஜாமைதீன் தனது முறையீட்டு மனுவில் தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்து, தற்காலிக பணி நீக்கத்தில் சென்ற திரு. கா. சுப்பிரமணியம் என்பவர் மீது பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளை கூறி அதன் மீது நடவடிக்கை எடுக்கவும், அவர்மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் உறுதியாகும் பட்சத்தில் அவருடைய ஊழல் சொத்துக்களை பறிமுதல் செய்து எட்டையபுரம் பேரூராட்சியில் சேர்க்க வேண்டும் எனவும், மேற்படி அலுவலர் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் கோரி தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரின் முறையீட்டு மனுவிற்கான விளக்கத்தினை அளிக்கக் கோரி இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.1217/2016/பே/நாள்:23.12.2016-ன் மூலம் பேரூராட்சி செயல் அலுவலர், எட்டையபுரம் அவர்களுக்கு ஆணையிடப்பட்டது.

பேரூராட்சி செயல் அலுவலர், எட்டையபுரம் தனது கடித எண்.03/2017/நாள்:23.01.2017-ல் முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள திரு. கா. சுப்பிரமணியன், எட்டையபுரம் முன்னாள் செயல் அலுவலர், பணகுடி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்து வந்த நிலையில் 30.11.2016 பிற்பகல் ஓய்வு பெறும் நாளில் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டு அவர் மீதுள்ள குற்றச்சாட்டுகளுக்கான ஒழுங்கு நடவடிக்கை அனைத்தும் மாவட்ட நிர்வாகம் மற்றும் பேரூராட்சிகளின் இயக்ககம் மூலம் எடுக்கப்பட்டு வருவதால் புகார் மனுவில் தெரிவித்துள்ளவாறு இறுதி விவரம் தெரிவிக்க இயலாத நிலை உள்ளதாக தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ கடித எண்.1217/2016/பே/நாள்:08.02.2017-ன்படி முறையீட்டு மனுதாரர் தனது 21.12.2016 ம் தேதிய மனுவில் எட்டயபுரம் பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலரும், கடைசியாக பணகுடி பேரூராட்சியில் பணிபுரிந்து 30.11.2016 அன்று ஓய்வு பெறும் நாளில் தற்காலிக பணி நீக்கத்தில் உள்ள திரு. கா. சுப்பிரமணியன் என்பவர் மீது எடுக்கப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கை விவரத்தினை அறிக்கை வாயிலாக அனுப்பக் கோரி மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் ஆகியோருக்கு அறிவிப்பாணை அனுப்பப்பட்டது.

பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண். 13023/2014/அ.4/நாள்:20.03.2017-ம் தேதிய கடிதத்தில் தனது அறிக்கையினை கீழ்கண்டவாறு இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

திரு. கா. சுப்பிரமணியம் என்பவர் எட்டயபுரம் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்த காலத்தில், எட்டயபுரம் பாண்டியன் கிராம வங்கியில் குறுகிய கால நிரந்தர வைப்பு தொகையாக ரூ.40.00 லட்சம், பேரூராட்சி நிதியினை முதலீடு செய்யப்பட்ட தொகையில் இருந்து தன்னிச்சையாக தனது பெயரில் கடந்த 18.09.2013-ல் கடனாக பெற்றதை கண்டறியப்பட்ட நிகழ்விற்காக, தனியரின் மீது தமிழ்நாடு குடிமை பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு விதி 17 (b) கீழ் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவரின் குற்றச்சாட்டு குறிப்பாணை எண்.2937/2014/பே.2/நாள்:18.08.2014ல், குற்றச்சாட்டுகள் பிறப்பிக்கப்பட்டதாகவும், ஒழுங்கு நடவடிக்கை விதிமுறைகளை பின்பற்றி இறுதி ஆணை பிறப்பிக்க கோப்பு நடவடிக்கையில் உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தனியர் எட்டயபுரம் மற்றும் ஸ்ரீவைகுண்டம் பேரூராட்சிகளில் செயல் அலுவலராக பணிபுரிந்த காலத்தில் தனியரின் மீது நிலுவையில் இருந்த 73 தணிக்கைத் தடைகள் மூலம்

ரூ.94,12,918/—நிதியிழப்பு காரணமாக தமிழ்நாடு குடிமைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு விதி 17(b) கீழ் பேரூராட்சிகளின் இயக்குநரின் குற்றச்சாட்டு குறிப்பாணை ந.க.எண். 16304/2016/அ.7/நாள்:29.11.2016—ல் குற்றச்சாட்டுகள் பிறப்பிக்கப்பட்டது எனவும், மேற்காணும் குற்றச்சாட்டுகள் காரணமாக தனியரை தற்காலிக பணிநீக்கம் செய்து பேரூராட்சிகளின் இயக்குநரின் செயல்முறை எண்.16304/2016/அ.7/நாள்: 29.11.2016—ல் ஆணையிடப்பட்டது எனவும் தனது கடிதத்தில் பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, உ.காஜாமைதீன், முறையீட்டு மனுதாரின் நேரடி வாக்குமூலம் பெறும் பொருட்டு இம்முறைமன்ற நடுவ எண்.1217/2016/பே/நாள்:08.02.2017—ன்படி 27.03.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி விளக்கம் அளிக்க அறிவிப்பாணை அனுப்பிவைக்கப்பட்டது.

திரு. உ. காஜாமைதீன் அவர்களின் கடித நாள்: 04.03.2017—ன்படி தனது உடல் நலம் கருத்தி நேரில் ஆஜராக இயலாத நிலையினை தெரிவித்ததை தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ எண்.1217/2016/பே/நாள்:13.03.2017—ன்படி முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் 13.04.2017 அன்று ஆஜராக அறிவிப்பாணை அனுப்பப்பட்டது.

திரு. உ. காஜாமைதீன், தனது 13.04.2017ம் தேதியிட்ட நேரடி வாக்குமூலத்தில் கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார்.

........29.11.2016ம் தேதிய மனு தன்னால் அனுப்பப்பட்டது எனவும், அதில் தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்த திரு. கா. சுப்பிரமணியம் என்பவர் தான் இப்பேரூராட்சியில் பணிபுரிந்தபோது பேரூராட்சி நிதியினை கையாடல் செய்தததாக 19.07.2014—ல் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டு, மீண்டும் 08.08.2016—ல் திருக்கழுகுன்றம் பேரூராட்சி நிர்வாக அதிகாரியாக பணி நியமனம் செய்யப்பட்டார் என தனது வாக்கு மூலத்தில் பதிவு செய்துள்ளார். அவரை மீண்டும் பணியமர்த்தியது குறித்து தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் கோரியமைக்கு எவ்வித பதிலும் தரவில்லை எனவும் தெரிவித்துள்ளார். திரு. கா. சுப்பிரமணியன், எட்டயபுரம் பேரூராட்சி செயல் அலுவலராக இருந்தபோது மிகவும் துணிச்சலாக பல தவறுகள் செய்து நிதி முறைகேடுகள் செய்துள்ளதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். இது போன்ற நபர் மீது எவ்வித குற்ற நடவடிக்கையும் எடுக்காமல் மீண்டும் செயல் அலுவலர் பணி தரப்பட்டுள்ளது. திரு கா.சுப்பிரமணியன் முன்னாள் செயல் அலுவலர் நிதி முறைகேடுகள் செய்ததை மாவட்ட ஆட்சியரிடம் தெரிவித்ததைத் தொடர்ந்து, அவர் பணிநீக்கம் செய்யப்பட்டார் எனவும் இந்த விவரம் 22.07.2014—ம் நாளிட்ட இந்து பத்திரிக்கையில் ரூ.5.5 லட்சம் கையாடல் செய்தமைக்காக சஸ்பெண்ட் என செய்தி வந்ததாக தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். ஆனால் மேற்படி அலுவலர் செய்ததை தற்போது தனி நபர் கடன் பெற்றதாக தெரிவித்து குற்றத்தினை மறைக்கப் பார்ப்பதாவும், அவர் ஓய்வு பெற்றுவிட்டாலும் எட்டயபுரத்தில் செய்த மோசடிகளை விரிவான விசாரணை மேற்கொண்டு அவர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும், சேர்த்த சொத்துக்களை பறிமுதல் செய்யவேண்டும் எனவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். சேர்த்துள்ள சொத்துக்கள் யாவும் தூத்துக்குடியில் அவர்களது உறவினர் பெயரில் பினாமி சொத்துக்களாக உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி அலுவலர் 2012 ஆகஸ்டு மாதத்தில் இருந்து வங்கியில் தொடர்ச்சியாக தனிநபர் கடன் என வாங்கி வருவதாகவும், இக்கடனை இரண்டு மாதங்களில் அடைத்து வந்ததாகவும், இந்நிகழ்வு செயற்கையாக உருவாக்கப்பட்டது எனவும், 18.08.2013 அன்று மேற்படி அலுவலர் கடன்

பெற்ற ரூ.5.5 லட்சம் தவறு என மாவட்ட ஆட்சியரிடம் மனு செய்ததாகவும், 18.07.2014–ல் விசாரணை மேற்கொண்டு 19.07.2014–ல் தற்காலிக பணி நீக்கம் செய்ததாகவும், இது போன்று மேற்படி அலுவலர் 2012–ம் ஆண்டு முதல் தவறுகள் செய்தது குறித்து பாண்டியன் கிராம வங்கி, எட்டயபுரம் கிளையில் விசாரித்தால் முழு விவரம் தெரியும் எனவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார்.

இந்நிகழ்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, நேரடி வாக்குமூலம் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநரின்20.03.2017 ம் நாளிட்ட அறிக்கை ஆகியவற்றினை நன்கு பரிசீலித்ததில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள, முன்னாள் செயல் அலுவலர். திரு கா.சுப்பிரமணியம், தன்னிச்சையாக ரூ.40.00 லட்சம் பேரூராட்சி நிதியினை எட்டயபுரம் பாண்டியன் கிராம வங்கியில் முதலீடு செய்யப்பட்ட தொகையில் இருந்து தனது பெயரில் 18.09.2013–ல் கடன் பெற்றுள்ளது கண்டறியப்பட்டு தமிழ்நாடு குடிமை பணி விதிகளின்படி குற்றச்சாட்டுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது உறுதியாகிறது. மேலும் மேற்படி செயல் அலுவலர் தான் பணிபுரிந்த பேரூராட்சிகளில் நிலுவையில் இருந்த தணிக்கைத் தடைகளின் நிலுவையின் காரணமாக பேரூராட்சிகளின் இயக்குநரின் செயல்முறை எண்.16304/2016/அ.7/நாள்:29.11.2016–ல் தற்காலிக பணிநீக்கம் செய்து ஆணையிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதையும் மனுதாரர் கூறியுள்ள பிற நடவடிக்கைகளையும் கவனத்தில் கொண்டு, தனியரின் மீது துறை ரீதியான இறுதி ஆணை பிறப்பிக்கப்படும் போது அவர்மீதுள்ள அனைத்துக் குற்றச்சாட்டுகளையும், அவை குறித்தான நடவடிக்கைகளையும் உள்ளடக்கி உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களை கோருவதுடன் அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017ம் ஆண்டு செப்டம்பர் திங்கள்14ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

–// ஆணைப்படி – அனுப்பப்படுகிறது//–

செயலாளர் 15/9/17

15/9/17

பெறுநர்

1.பேரூராட்சிகளின் இயக்குநர்,
குறளகம்,
சென்னை.

2.திரு உ. காஜாமைதீன்,
தலைவர்,
எட்டையாபுரம் நகர் நலச்சங்கம்,
25. நாவலக்கம்பட்டி ரோடு,
எட்டயபுரம்–628 902
தூத்துக்குடி மாவட்டம்.